பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 27 புதன்கிழமை 12.08.2020 கதிர் 147

## ஹெரோயின் மற்றும் ரூ.70 லட்சத்துடன் பெண் ஒருவர் கைது

புறக்கோட்டை, பெத்தேகம பகுதியில் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து சுமார் எழுபது லட்சம் ரூபா பணம் மற்றும் 2

# மொட்டுவின் புதிய அமைச்சரவையில் 5 ராஜபக்ஷக்களுக்கு அமைச்சுப் பதவி!



கொழும்பு, ஒக 12

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசின் அமைச்சரவையில் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் அமைச்சர்களாக இன்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சராகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதி, புத்த சாசனம், மத விவகாரம் மற்றும் கலாசார அலுவல்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

சமல் ராஜபக்ஷ நீர்ப்பாசனத்துறை அமைச்சராகவும், உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் இராஜாங்க அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன் இளம் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ முதல் தடவையாக அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக 2

## மேர்வினின் மகனுக்குப் பிணை!



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக சில்வாவுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு கைது செய்யப்பட்ட மாலக சில்வாவை, கடுவல நீதிவான் நீதிமன்றத்தில் இன்று பொலிஸார் முன்னிலைப்படுத்தியபோதே, இப்பிணை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 2

### மைத்திரி, எஸ்.பி., சுசில், விஜயதாஸ உட்பட

## அரசின் முக்கிய புள்ளிகளுக்கு அமைச்சுப் பதவிகள் இல்லை!



**கொழும்பு, ஒக 12**

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசின் அமைச்சரவையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சுப் பதவி எதுவும் வழங்கப்படவில்லை.** 2

## இந்தியத் தூதுவருடன் மனோ அணி சந்திப்பு



கொழும்பு, ஒக 12

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேக்கும் இடையிலான சந்திப்பு இன்று கொழும்பு 7இல் அமைந்துள்ள இந்தியன் இல்லத்தில் நடைபெற்றது. 2

## அமைச்சரவையில் ஒரேயொரு முஸ்லிம்

### ராஜாங்க அமைச்சர்களில் எவருமில்லை

கொழும்பு, ஒக 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று புதன்கிழமை பதவியேற்ற புதிய அமைச்சரவையில் ஒரேயொரு முஸ்லிம் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராகிய ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரிக்கு நீதி அமைச்சு கிடைத்துள்ளது.

ராஜாங்க அமைச்சராக 2

## ஐ.தே.கவின் தலைவராகக் கரு; பொதுச்செயலாளராக மங்கள?

கொழும்பு, க் 12

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் சபா நாயகருமான கரு ஜய சூரியவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொதுச்செயலாளர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் பெயர் 2

# புதிய அரசின் அமைச்சரவை பதவிப் பிரமாணம்

- பிரதமர் உட்பட அமைச்சரவை அமைச்சர்கள் 25 பேர்
- இராஜாங்க அமைச்சர்கள் 39 பேர்
- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் 23 பேர்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசின் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

பதவிப் பிரமாண நிகழ்வு கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகுல்மடுவ மண்டபத்தில் நடைபெற்றது.

சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணித்த செயற்திறன் வாய்ந்த அமைச்சரவை ஒன்றின் தேவை குறித்து 2

## புதிய அரசின் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்ப தேசிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடைமுறை சாத்தியமானதும் யதார்த்தமானதுமான அமைச்சரவையின் எண்ணிக்கை திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சு கட்டமைப்பை அமைப்பதில் தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில் பிரதமர் உட்பட 25 பேர் அங்கம் வகிக்கின்றனர். இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 39 ஆகும். மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர்களாக 23 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து புதிய அமைச்சரவை மற்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களை ஆசிர்வதித்தனர்.

மாவட்டக் குழுத் தலைவர்களுக்கான நியமனப் பத்திரம் ஜனாதிபதியால் முதலில் வழங்கி வைக்கப்பட்டன.

## மொட்டுவின் புதிய .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை, மொனராகலை மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற சஷீந்திர ராஜபக்ஷ நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழிநுட்ப விவசாயத்துறை இராஜாங்க அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

## அமைச்சரவையில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முஸ்லிம்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. மாவட்ட இணைப்புக்குழுத் தலைவராக, ஒரு முஸ்லிம் - அதாவது மஸ்தான் நியமனமாகியுள்ளார். அவர் மன்னார், முல்லைத்தீவு இணைப்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஐ.தே.கவின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரிந்துரைக்கப்பட்டுள்ளது என சிறிகொத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியில் பதவிகளை ஏற்பது தொடர்பில் இவ்விருவரும் இன்னும் தமது நிலைப்பாடுகளைத் தெரியப்படுத்த வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட கூட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது. இதன்போதும் இது பற்றி கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இந்தியத் தூதுவருடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே. இராதாகிருஸ்ணன், உப தலைவர்களான எம்.வேலுகுமார், அ.அரவிந்குமார், எம்.உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பொதுச்செயலாளர் சந்திரா சாப்டரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

பிரதி இந்தியத் தூதுவர் வினோத் ஜெகப், அரசியல்துறைப் பொறுப்பாளர் கவுன்சிலர் திருமதி பானுபிரகாஸ் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மலையகத்துக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உட்பட சமகால விவகாரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

# சம்பந்தரை அழைக்கிறது ஜனாதிபதி ஆணைக்குழு!

கொழும்பு, ஒகஸ்ட் 12

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்டோருக்கு ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது..

இதன்படி, எதிர்வரும் 21ஆம் திகதி அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அழைக்கப்பட்டுள்ளார்.

இவர்களுடன், மங்கள சமரவீர, பாட்டலிசம்பிக்கரணவக்க, சரத்பொன்சேகா, அனுரகுமார திசாநாயக்க, ரவுப் ஹக்கீம் உள்ளிட்ட மேலும் பலருக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## அரசின் முக்கிய புள்ளிகளுக்கு .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலனறுவை மாவட்டத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற மைத்திரிபால, தமக்கு மகாவலி அமைச்சு வழங்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை அதிருப்தியடைய வைத்துள்ளது. அவருக்கு சபாநாயகர் பதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்க, விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோருக்கும் அமைச்சரவையில் இடம் வழங்கப்படவில்லை.

மஹிந்த ஆட்சியிலும் நல்லாட்சியிலும் அமைச்சுப் பதவிகளை வகித்த சுசில் பிரேமஜயந்த, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, டிலான் பெரேரா, மஹிந்த சமரசிங்க மற்றும் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை.

'மொட்டு' கட்சியில் கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ரஞ்சித் சியம்பலாபிட்டியவும் ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

சந்திம வீரக்கொடிக்கு அமைச்சுப் பதவி கிடைக்காத போதிலும் அவர் பிரதி சபாநாயகராக நியமிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மேர்வினின் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் கோரி, கொலை அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய மாலக சில்வாவை, தலங்கம பொலிஸார் நேற்றிரவு கைதுசெய்திருந்தனர்.

கடந்த ஜூலை மாதம் 16ஆம் திகதி தலங்கம பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரிடம், ஒரு இலட்சம் ரூபாவை சந்தேகநபர் கோரியிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹெரோயின் மற்றும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
800 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மீகஹவத்த பொலிஸ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணைகளுக்கு பின்னர் இந்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நெருக்கடியில் மைத்திரி

பொதுத் தேர்தல் முடிந்து புதிய அரசு, ஆட்சி அதிகாரத்துக்கு வந்து விட்டது. அமைச்சரவையும் பதவியேற்றுக் கொண்டு விட்டது.

புதிய அமைச்சரவை பதவியேற்பின்போது இடம்பெற்ற முக்கிய விடயம், பொதுஜன பெரமுன கூட்டணியில் சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள இடமாகும்.

அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள போதும், அவருக்கு அமைச்சரவையில் இடமளிக்கவில்லை. கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகராவுக்கு வெறும் இராஜாங்க அமைச்சுப் பதவியே. கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த சில்வாவுக்கும் அதே நிலைமைதான்.

முன்னைய மைத்திரி அரசாங்கத்தில் வலுமிக்க சுந்திரக் கட்சித் தலைவர்களாக இருந்தவர்கள் எல்லாம் கனகச்சிதமாக – சத்தம் சந்தடியின்றி – ஓரங்கட்டப்பட்டிருக்கின்றார்கள்.

நல்லாட்சி அரசு அமைப்பதற்கு மக்கள் 2015 இல் தந்த ஆணையை அடியோடு புறக்கணித்து, அந்த ஆட்சியின் பங்குதாரர்களாக விளங்கிய ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் வீழ்த்துகிறோம் என்று எண்ணி நடவடிக்கையில் ஈடுபட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது கும்பலும் இன்று அதன் மோசமான விளைவுகளைப் பட்டுத் தெளியும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

ராஜபக்ஷக்களின் புதிய அரசில் சபாநாயகராகலாம் என்று கனவு கண்டார் மைத்திரிபால. அந்தக் கோரிக்கையை ராஜபக்ஷக்கள் கணக்கில் எடுக்கவில்லை.

தமது பொலன்னறுவை மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய ஏதேனும் அமைச்சைப் பெற்று பணியாற்றலாம் என்றும் கூட அவர் எண்ணினார். ஆனால் அதற்கும் ராஜபக்ஷக்கள் இடமளிக்கவில்லை.

பொதுஜன பெரமுனவில் இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பங்குதாரராக இருந்தபோதும், அக்கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சரவையில் ஏன் இடமளிக்கவில்லை என்பது தொடர்பில் கொழும்பு செய்தி வட்டாரங்கள் பலவும் வேறு விதமான தகவல்களை வெளியிடுகின்றன.

கடந்த வருடம் ஈஸ்டர் ஞாயிறு தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தியிருக்கின்றது ராஜபக்ஷக்கள் அரசு.

அந்த விடயங்கள் எல்லாம் சுற்றி வந்து மைத்திரிபால சிறிசேனவைத் தொட்டு நிற்கின்றன என்று கூறப்படுகின்றது.

மைத்திரியைச் சூழவிருந்த பல பாதுகாப்பு அதிகாரிகள் இது தொடர்பாகத் தமக்குத் தெரிந்த பல உண்மைகளை சம்பந்தப்பட்ட விசாரணைக் குழுவின் முன் வெளிப்படுத்தி விட்டனர்.

அந்தத் தொடர் தாக்குதல்கள் நடைபெற்றபோது பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தனா, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கா ஆகியோரை அடுத்த வாரம், மேற்படி உயிர்த்த ஞாயிறு காலத் தொடர் குண்டுத் தாக்குதல்கள் குறித்து விசாரித்து வரும் ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் மூவரினதும் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ததும், இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல் விவகாரத்தைத் தடுப்பதற்கு போதிய வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் இருந்தும் அதனை உதாசீனப்படுத்தி நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது சுமத்தப்படுவதற்கான சான்றாதாரங்கள் சரியாக அமைந்து விடும் என்று கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

அத்தகைய விசாரணை வளையத்துக்குள் சிக்கப் போகின்றவருக்கு அமைச்சர் பதவியை வழங்கி, பாதுகாப்பு அளிப்பதில் ராஜபக்ஷக்களுக்கு உடன்பாடில்லை என்றும், அதனால்தான் இந்த அமைச்சரவையில் சு.க. தலைவருக்கு இடம் அளிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தொடர்த் தாக்குதல்களுக்கான பொறுப்பை வெறுமனே அப்போதைய பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மீது சுமத்தி விட்டு ஜனாதிபதியாகவிருந்த மைத்திரிபால சிறிசேன தப்பி விட முடியாது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அதுதான் உண்மையான நிலைவரம் என்றால் மைத்திரிபால சிறிசேனவின் எதிர்காலம் மிகச் சிக்கல்தான்.

ஜனாதிபதி பதவியில் இருந்தவர் ஆற்றிய, ஆற்றத் தவறிய நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்ற விசாரணை நடத்தவோ, தண்டனை அளிக்கவோ முடியாது என்றிருந்த விசேட சிறப்புரிமையை மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசே 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் நீக்கியது. ஜனாதிபதியின் நடவடிக்கைகளை நீதிமன்றத்தில் முன் நிறுத்த வழி செய்யும் அரசமைப்புத் திருத்தத்தைத் தாமே கொண்டு வந்தார் என்று தமது ஆட்சிக் காலத்தில் தம்மைத் தாமே பாராட்டிப் பீற்றிக் கொள்ளவும் அவர் தவறியவர் அல்லர்.

அந்த சிறப்புரிமை நீக்கத்துக்கு வழி செய்த 19 ஆவது திருத்தத்தை அடியோடு ஒழிக்கவும், மீண்டும் ஜனாதிபதிக்கு அந்த விசேட உரிமையை வழங்கவும் தயாராகும் ராஜபக்ஷக்கள் அரசு, அதற்கு இடையில் அந்த சிறப்புரிமை நீக்கத்தைப் பயன்படுத்தி, மைத்திரிபால சிறிசேனவை மாட்டி வைக்கவும் காய்நகர்த்துகின்றது. பாவம் மைத்திரி. தன் வினை தன்னைச் சுடப்போகின்றது. அவ்வளவுதான்.

# எமக்கு எதிராக வாக்களித்த மக்களையும் ஒன்றிணைப்பேன்!

## இரா.சாணக்கியன் உறுதி



கூட்டமைப்புக்கு எதிராக வாக்களித்த மக்களையும் ஒன்று சேர்த்து கட்சியை கட்டியெழுப்புவேன் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'எனக்கு வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் அனைவருக்கும் பொதுவான நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவேன்.

வருங்காலத்தில் தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்புவது எனது மிகவும் முக்கியமான கடமையாக இருக்கும். தமிழரசுக்கட்சியை மீளகட்டியெழுப்பிவெற்றியை நோக்கிகொண்டு செல்வதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுப்பேன். கட்சியின் மத்திய குழு எடுக்கும் தீர்மானங்களை கட்டியெழுப்புவது எனது கடமையாக இருக்கும்.

கிழக்கை மீட்கப்போகின்றோம் எனவும் பிரதேசவாதங்களையும் பேசி வாக்குகேட்டவர்கள் அனைவரும் அமைச்சு பதவிகளை இந்த அரசாங்கத்திடம் கோரவேண்டும்.

அதன்மூலம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம். அதேபோன்று அதனைவிட தமிழ்த் தேசியத்தைப் புறக்கணித்து அபிவிருத்திக்காக வாக்களித்த மக்கள் அவர்களின் காரியாலயத்தை முற்றுகையிட்டு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அழுத்தங்களை வழங்கவேண்டும்.

எங்களிடமும் வாருங்கள் தமிழர்களுக்கு எங்காவது அநீதி நடந்தால், தமிழர்களின் நில அபகரிப்பு, தமிழர்களுக்கு எதிராக ஏதாவது அநீதி நடைபெற்றால் அதற்கு எதிரான குரலை நாங்கள் வழங்குவோம். எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை செய்வோம் என்ற அடிப்படையில் தமிழர்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் செய்யக்கூடிய அனைத்து அபிவிருத்திகளையும் செய்வோம்.

அத்தோடு சர்வதேச சமூகத்துடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் சிந்தித்துக்கொண்டிருக்கின்றோம். அபிவிருத்தி செய்வோம் என்று கூறிவந்தவர்கள் செய்யமுடியாத சில வேலைத்திட்டங்களை நாங்கள் செய்வோம்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தாமை காரணமாகவே அங்குள்ள மக்கள் வேறு கட்சிக்கு வாக்களிக்கும் நிலைமை ஏற்பட்டது. அம்பாறை மாவட்டம் என்பது வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முக்கிய பகுதியாகும்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றால் தமிழர்களின் பிரதிநிதித்துவம் அங்கு உறுதிப்படுத்தப்படவேண்டும். அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் ஆசனம் அம்பாறைக்கு வழங்கப்பட்டமையை நான் வரவேற்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அம்பாறை மாவட்ட மக்கள் கைவிட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மக்களைக் கைவிடவில்லை. அம்பாறை மாவட்ட மக்களின் ஏகபிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் என்பதை அம்பாறை மாவட்ட மக்கள் உணர்ந்துகொள்வார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் வாக்கைப் பிரித்து பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்தவருக்கு அவரை அங்கு இறக்கிய கட்சியினர் ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை வழங்கியிருக்க முடியும்.

எதிர்காலத்தில் கல்முனை பிரதேச செயலகத்தின் அதிகாரங்களைப் பூரணமாக வழங்குதற்குத் தேவையான அழுத்தங்களை அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக வழங்குவேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தயாசிறி, துமிந்தவுக்கு இராஜாங்க அமைச்சே!





மைத்திரி – ரணில் தலைமையிலான நல்லாட்சியில் முக்கியமான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோருக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசின் அமைச்சரவை நியமனத்தில் இராஜாங்க அமைச்சுக்களே வழங்கப்பட்டுள்ளன.

தயாசிறி ஜயசேகர – பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்திகள் இராஜாங்க அமைச்சராகவும், துமிந்த திஸாநாயக்க – சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும் ஜனாதிபதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

# தனிமைப்படுத்தலில் இருந்த கர்ப்பிணிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்!

முல்லைத்தீவு – கேப்பாப்புலவு விமானப் படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் இருந்த மூன்று கர்ப்பிணிப் பெண்கள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று(புதன்கிழமை) இந்த மூவரும் இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் இருந்து வருகைதந்த 256 பேர், ஓகஸ்ட் 9ஆம் திகதியன்று, கேப்பாப்புலவு விமானப்படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், அவர்களில் மூன்று கர்ப்பிணிப் பெண்கள், மகப்பேற்று காலம் நெருங்கிய காரணத்தால், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சீன ஜனாதிபதியுடனான நல்லுறவு கொரோனாவால் முறிந்தது! - ட்ரம்ப்



சீன ஜனாதிபதி சி ஜிங் பிங்க் உடன் தனக்கு இருந்த உறவு கொரோனா வைரஸ் பரவல் காரணமாக குறை வடைந்துள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று வானொலி நேர் காணல் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப், மேற்படி உறவு நிலை தேய்வு காரணமாக நீண்ட காலமாகத் தான் சீன அதி பருடன் பேசவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர் -

'நான் சீன அதிபருடன் நீண்ட நாள்களாக நல்ல உறவைப் பேணி வந்தேன். அவரை எனக்கு பிடிக்கும். ஆனால் தற்போது அவ்வாறு இல்லை' எனத் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலேயே தனது மனநிலை மாறியதாகத் தெரிவித் துள்ள ரொனால்ட் ட்ரம்ப், திடீரென தமது உறவு தொடர் பாக வித்தியாசமாக உணர்ந்ததாகவும், அதன் காரண மாக நீண்ட நாள்களாக சி ஜின் பிங்குடன் தான் பேசவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான வர்த்தக உறவு நிலைகள் ஏற்கனவே முறுகல் நிலையை எட்டியுள்ள நிலையில், அமெரிக் காவில் மிக மோசமான அழிவுகளை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் பரவல் வர்த்தக முரண்பாடுகளை விட மோசமான விளைவுகளைத் தோற்றுவித்திருப்ப தாக ரொனால்ட் ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.

'இது வர்த்தக முரண்பாடுகள் தோற்றுவித்த விளைவு களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமானவை. இது மிகவும் இழிவான செயற்பாடு' என இதன்போது அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் கடந்த 2019 ஆம் ஆண்டு சீனாவில் கண்டறியப்பட்ட நிலையில், இதுவரை உலகளாவிய ரீதியில் இந்த வைரஸ் காரணமாக 20 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, 7 லட்சத்து 35 ஆயிரத்து 370 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.


இவற்றுள், 5.1 மில்லியனுக்கும் அதிகமான பாதிப்பு கள் மற்றும் ஒரு லட்சத்து 63 ஆயிரத்து 160 இற்கும் அதிகமான இறப்புகள் அமெரிக்காவில் பதிவாகியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## முதல் கொரோனா தடுப்பூசியை உருவாக்கியது ரஷ்யா - புடின்

உலகின் முதல் கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு நாட்டின் சுகாதார அமைச்சு ஒப்புதல் அளித்துள்ளதாக ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

மேலும் மனிதர்கள் மீதான பரிசோதனை வெற்றிகரமாக நடைபெற்று முடிந் துள்ளது என்றும் தனது மகளுக்கும் குறித்த தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றும் அவர் அறிவித் துள்ளார்.

ரஷ்யாவின் முதல் கொரோனா வைரஸ் தடுப்பூசி கமலேயா ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு இணைந்து உருவாக்கியுள்ளது.



இன்று காலை, உலகில் முதல் முறை யாக, கொரோனா வைர ஸுக்கு எதிராக ஒரு தடுப்பூசி கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக ஜனாதி பதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைர ஸுக்கு எதிரான முதல் தடுப்பூசியை கண்டு பிடிக்க பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்த புடின் மேலும் இது 'உலகிற்கு மிக முக்கியமான படி' என்று குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா பாதிப்பு ரஷ்யாவில் ஏப்ரலுக்குப் பின்னர் குறைவு!

ரஷ்யாவில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்றினால் ஏப்ரல் மாத பிற்பகுதிக்கு பிறகு குறைந்த அளவிலான பாதிப்பு பதிவாகியுள் ளது.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் நான்காயிரத்து 945 பேர் பாதிப்படைந்ததோடு, 130 பேர் உயி ரிழந்துள்ளதாக, ரஷ்யாவின் கொரோனா வைரஸ் நெருக்கடியை கண்காணிக்கும் மையம் தெரிவித் துள்ளது.


இதுவே ஏப்ரல் 23ஆம் திக திக்கு (4,774 பேர்) பிறகு பதிவான பிறகு குறைந்த அளவிலான கொவிட் - 19 பாதிப்பு ஆகும்.

கொரோனா வைரஸ் பெருந் தொற்றினால், அதிக பாதிப்பை எதிர் கொண்ட நான்காவது நாடாக விளங்கும் ரஷ்யாவில், இதுவரை எட்டு இலட்சத்து 97 ஆயிரத்து 559 பேர் பாதிப்படைந்துள்ளனர். மேலும், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 131 ஆக உள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான ஒரு இலட் சத்து 79 ஆயிரத்து 293 பேர் மருத் துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 2,300 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் ஏழு இலட்சத்து மூவாயிரத்து 175 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

## ரஷ்யாவின் கொரோனாத் தடுப்பூசி: உலக சுகாதார அமைப்பு கருத்து!




உலகத்தின் முதல் தடுப்பூசியை பதிவு செய்துள்ளதாக ரஷ்யா தெரி வித்துள்ள நிலையில், கடுமையான ஆய்வு தேவை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் செய்தி தொடர்பாளர் தாரிக் ஜசரேவிக் ஜெனீவாவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

'ரஷ்யாவின் சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் நாங்கள் தொடர்பில் உள்ளோம். தடுப்பூசிக்கு முன் தகுதி அளிப்பது குறித்த நடைமுறைகள் பற்றிய ஆலோசனை நடைபெறு கின்றது.

எந்த ஒரு தடுப்பூசிக்கும் முன் தகுதி அளிப்பது என்பது தேவையான பாதுகாப்பு மற்றும் திறன் அம்சங் களைக் கடுமையாக மதிப்பாய்வு செய்த பின்னரே இருக்கும்' - எனத் தெரிவித்தார்.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸுக்கு எதிராக உலகமெங்கும் ஏறத்தாழ 165 தடுப்பூசிகள் உரு வாக்கப்பட்டு வருவதாக உலக சுகா தார நிறுவனம் கூறுகிறது.

இவற்றில் ஒக்ஸ்போர்ட் பல் கலைக்கழகத்தின் 'கோவிஷீல்டு' உள்ளிட்ட 6 தடுப்பூசிகள் மட்டும் பரி சோதனையின் இறுதிக்கட்டத்தில் உள்ளன.

கொரோனாவால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக விளங்கும் ரஷ்யாவில் அந்த நாட் டின் இராணுவ அமைச்சகமும், கம லேயா தொற்றுநோயியல், நுண்ணு யிரியல் அறிவியல் ஆராய்ச்சி நிறு வனமும் சேர்ந்து ஒரு தடுப்பூசியை உருவாக்கி உள்ளன.

இந்த தடுப்பூசி பரிசோதனை களை வெற்றிகரமாக முடித்துக் கொண்டுள்ள நிலையில், விரைவில் பதிவு செய்யப்படும் எனத் தகவல்கள் வெளிவந்தன. அதன்படி, அந்த தடுப்பூசி பொதுமக்கள் பயன்பாட்டுக் காகத் தயாராகி நேற்று பதிவு செய் யப்பட்டது.

இந்தத் தகவலை வெளியிட்ட ரஷ்ய அதிபர் புடின், கொரோனா தடுப்பூசிக்கு 'ஸ்புட்னிக் - வி' என பெயரிடப்பட்டுள்ளதாகவும் இது மிகவும் திறம்பட செயற்படுகிறது என்றும் தெரிவித்தார்.

இது ஒரு நிலையான எதிர்ப்பு சக் தியை உருவாக்குகிறது என்பதோடு, இந்தத் தடுப்பூசி, தேவையான சோத னைகளுக்கு உட்படுத்தப்பட்டுவிட் டது எனக் குறிப்பிட்டார்.

மேலும் இந்தத் தடுப்பூசி ஆற்றல் மிக்கது என்பது சோதனைகளில் நிரூபிக்கப்பட்டுள்ளதுடன், இது பாது காப்பானது எனத் தெரிய வந்துள் ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, 3ஆவது கட்ட சோதனையை இன்று தொடங்க இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

## புகலிட சட்டங்களில் மாற்றங்கள் பிரித்தானியா பரிசீலிக்கவேண்டும்! என்கிறார் பிரதமர் பொரிஸ்

புலம்பெயர்ந்தோர் ஆங்கில கால்வாய் ஊடாக கடப்பதைத் தடுக்க, புகலிடம் சட்டங் களில் மாற்றங்கள் கொண்டுவரப்படுகின் றமை தொடர்பாக, பிரித்தானியா பரிசீலிக்க வேண்டும் என்று பிரதமர் பொரிஸ் ஜோன் சன் தெரிவித்துள்ளார்.

சிறிய படகுகளைப் பயன்படுத்தி பிரான்ஸி லிருந்து பிரித்தானியாவிற்கு வரும் மக்களை சட்டப்பூர்வமாக திருப்பி அனுப்புவது தற்போது மிகவும், மிகவும் கடினம் என்று பிரதமர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டு இதுவரை 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெற்றிகரமாக ஆங்கில கால் வாய்யைக் கடந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையை எவ்வாறு குறைப்பது என்பது குறித்து விவாதிக்க பிரித்தா னியா மற்றும் பிரான்ஸ் அமைச்சர்கள் பின்னர் பேச்சுக்களை நடத்துவார்கள்.

## ஈரானின் ஆயுதத் தடையை நீடிக்க 6 வளைகுடா நாடுகள் கோரிக்கை!

ஈரான் மீதான ஐ.நா. ஆயுத தடையை மேலும் நீடிக்க வேண்டும் என 6 வளைகுடா நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அணுசக்தி ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி ஈரான் மீதான ஐ.நா. ஆயுத தடை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் முடிவுக்கு வர உள்ளது.

எனவே ஈரான் மீதான இந்த தடையை மேலும் நீடிக்க வேண்டும் என ஐ.நா., பாதுகாப்பு சபையிடம் வலியுறுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கட்டார், ஓமன், குவைத் மற் றும் பஹ்ரைன் ஆகிய 6 வளைகுடா நாடுகள் ஈரான் மீதான ஐ.நா. ஆயுத தடையை நீடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக வளைகுடா ஒத்துழைப்பு சபை, ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு கடிதமொன்றை எழுதியுள்ளது.

இதில் ஈரான் போர் விமானங்கள், இராணுவ தாங்கிகள் மற்றும் போர்க் கப்பல்கள் போன்ற வெளிநாட்டு தயாரிப்பு ஆயுதங்களை வாங்குவதை தடுக்கும் ஆயுத தடையை நீடிப்பதற்கு மேற்கூறிய 6 நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஈரான் அண்டை நாடுகளில் ஆயுத தலையீடுகளை நிறுத்தவில்லை. நேரடியாகவும்



ஈரானால் பயிற்சியளிக்கப்பட்ட ஆயுத இயக்கங்கள் மூலமாகவும் அந்த நாடு ஆயுத பரிமாற்றங்களில் ஈடுபட்டு வருகின்றது.

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சண்டையிட்டு வரும் சவுதி அரேபியா, ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆயுதங்களை வழங்கி வருகின்றது' என குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே வளைகுடா நாடுகளின் இந்த நடவடிக்கைக்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. வளைகுடா ஒத்துழைப்பு சபையின் இந்த கடிதம் அமெரிக்க நலன்களுக்க சேவை செய்யும் பொறுப்பற்ற செயல் என ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் அப்பாஸ் மவுசாவி கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொரோனா வைரஸ் தொற்று உலகில் இந்தியா முதலிடம்!

கடந்த ஒரு வாரத்தில் உலகளவில் நாள்தோறும் கொரோனா தொற்றால் அதிகம் பாதிக்கப்படுவர்களின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக ஒரேநாளில் 61 ஆயிரத்து 252 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், 835 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 23 இலட்சத்து 28 ஆயிரத்தைக் கடந்துள்ளதுடன், உயிரிழந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 46 ஆயிரத்து 188 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 16 இலட்சத்து 38 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில், 64 இலட்சத்து 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்



தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் எட்டாயிரத்திற்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.



## ட்ரோன்களைக் கொள்முதல் செய்ய இந்தியா திட்டம்!

இஸ்ரேலின் ஹெரான் ட்ரோன் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்களை கொள்முதல் செய்ய இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் தலைமையிலான பாதுகாப்பு ஒப்பந்தங்களுக்கான குழு ஒப்புதல் அளித்துள்ளது.

எல்லையில் சீனா உடன் மோதல் போக்கு நிலவும் சூழலில் பாதுகாப்பு பலத்தை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்தவகையில், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள புராஜக்ட் சீடா எனும் திட்டத்தின் கீழ், சுமார் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் ட்ரோன்களைக் கொள்வனவு செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது. அத்துடன் ரஷ்யாவின் கலானிகோவ் துப்பாக்கிகளை உள்நாட்டிலேயே தயாரிக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 8 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பில் அடிப்படை பயிற்சி விமானம், கடற்படை துப்பாக்கிகள் மற்றும் டேங்கர்களுக்கு எதிர்த்தாகுதல் நடத்துவதற்கான வெடிமருந்துகளை வாங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுய பாதுகாப்பு அவசியமாகும் வலியுறுத்துகின்றார் ஸ்ராலின்!

அரசை நம்பாமல் கொரோனா வைரஸிலிருந்து பாதுகாத்துக்கொள்ள 'சுய பாதுகாப்பு' நடவடிக்கைகளில் மக்கள் கவனமாக ஈடுபட வேண்டும் என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.

கொரோனாவைக் கட்டுப்படுத்த ஊரடங்குதான் ஒரே தீர்வு என்று அ.தி.மு.க. அரசு கூறியது. ஆனால் மார்ச் மாதம் தொடங்கிய ஊரடங்குக் காலம் ஓகஸ்ட் மாதத்தை நெருங்கிய பிறகும் கொரோனா பாதிப்பு குறையவில்லை.

பாடசாலைகள் - பல்கலைக்கழகங்கள்;, பொதுப் போக்குவரத்து, கோயில்கள் தவிர எல்லாம் செயற்பட அனுமதித்துவிட்டு, இதனை ஊரடங்கு என்று சொல்வதைப்போல கேலிக்கூத்து இருக்க முடியாது.

இந்தக் கண்துடைப்பு நாடகத்தின் மூலமாக இலட்சக்கணக்கான மக்கள் வாழ்வாதாரம் இழந்தமைதான் அவர்கள் கண்ட பலன். இவ்வளவுக்குப் பிறகும் கொரோனா பரவல் தடுக்கப்படவில்லை.

கொரோனாவிலிருந்து பாதுகாத்துக்கொள்ள 'சுய பாதுகாப்பு' நடவடிக்கைகளில் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் என்று மிகுந்த அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் அது ஒன்றுதான் உயிர்ப் பாதுகாப்புக்கான ஒரே வழி என்று தோன்றுகிறது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கோழிக்கோடு விமான விபத்துக்கு விமானியின் தவறான முடிவே காரணம்?

### பாதுகாப்பு வல்லுநர்கள் சந்தேகம்

கோழிக்கோடு விமான விபத்துக்கு விமானிகளின் தவறான முடிவும் காரணமாக இருக்கலாம் என பாதுகாப்பு வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

டுபாயில் இருந்து 190 பயணிகளுடன் இந்தியா வருகை தந்த ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் தரையிறங்கிய போது விபத்தில் சிக்கியது.

இதற்கு காரணமாக சீரற்ற காலநிலை உள்ளிட்ட பல்வேறு காரணிகள் கூறப்படுகின்ற நிலையில் விமானிகளின் தவறான முடிவும் காரணமாக இருக்கலாம் என பாதுகாப்பு வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பலத்த மழை காரணமாக முதல் முயற்சியில் விமானத்தை தரையிறக்க முடியாதபோது விமானத்தை மற்றொரு விமான நிலையத்துக்கு திருப்பாதது விமானிகளின் தவறு என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஈரமான ஓடுபாதையில் தரையிறக்கியதன் மூலம் கடந்த 2011 ஆம் ஆண்டு இதேபோன்ற விபத்து ஒன்று நடந்திருக்கும் நிலையில் மீண்டும் அதைப்போல ஒரு முடிவு எடுத்தது முட்டாள்தனமானது என சிவில் விமான போக்குவரத்து பாதுகாப்பு ஆலோசனை குழுவின் முன்னாள் உறுப்பினர் ரங்கநாதன் கூறியுள்ளார்.

## கொரோனா தடுப்பூசி கூட்டம் இன்று கூடியது!




இந்தியாவில் கொரோனா நோய்த் தொற்று தடுப்பூசி தயாரிக்கப்பட்டப்பின் அதனை கையாள்வது மற்றும் விநியோகிப்பது தொடர்பில் ஆலோசிப்பதற்காக அமைக்கப் பட்ட நிர்வாக குழு இன்று (புதன் கிழமை) கூடியது.

இது தொடர்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், ' நீதி ஆயோக் உறுப்பினர் மருத்துவர் வி.கே. பால் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிர்வாகக் குழு கொரோனா தடுப்பு ஊசி தயாரிக் கப்பட்டவுடன் அதை வெளியிடுவது, உற்பத்தி செய்து தேவைக்கு ஏற்ப சேமித்து வைப்பது, பத்திரமாகக் கையாள பயிற்சி அளிப்பது போன்ற விவகாரங்கள் குறித்துத் திட்டமிடுவதற்காக புதன்கிழமை கூடியதுஃ

'இந்தக் குழு மாநில அரசுகள், தடுப்பு ஊசி உற்பத்தியாளர்கள் ஆகியோருடனும் தொடர்பில் இருக்கும் இந்திய மருத்துவ கவுன்சில், ஜைடஸ் கேடில்லா ஆகியவற்றுடன் இணைந்து பாரத் பயோடேக் நிறுவனம் கொரோனா தடுப்பு ஊசியை உருவாக்கியுள்ளது. 'இந்தத் தடுப்பு ஊசி இரண்டாம் கட்ட பரிசோதனையில் உள்ளது.

இதேபோல் இந்தியாவைச் சேர்ந்த சீரம் நிறுவனம் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தயாரித்துள்ள கொரோனா தடுப்பு ஊசி மூன்றாம் கட்ட பரிசோதனையில் உள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவின் மருந்து பாதுகாப்பானதா? எய்ம்ஸ் மருத்துவமனை மதிப்பீடு!

கொரோனாவுக்கு ரஷ்யா தயாரித்துள்ள தடுப்பு மருந்து பாதுகாப்பானதா? திற னாகப் பயனளிக்கக் கூடியதா? என்பதை மதிப்பிட வேண்டியுள்ளதாக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் ரண்தீப் குலேரியா தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பு மருந்தைத் தயாரித்துள்ளதாக ரஷ்யா நேற்று (செவ்வாய்க்கிழமை) அறிவித்தது.

இந்த நிலையில், இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் ரண்தீப் குலேரியா, ரஷ்யாவின் தடுப்பு மருந்து வெற்றிபெற்றால், அது பாதுகாப்பானதா? திறனாகப் பயனளிக்கக்கூடியதா? என மதிப்பிட வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்தோடு, நல்ல நோய் எதிர்ப்பாற்றலையும் பாதுகாப்பையும் வழங்கும் தடுப்பூசி எந்தப் பக்க விளைவையும் கொண்டிருக்கக்கூடாது எனவும் அவர்




குறிப்பிட்டார்.

மேலும் தடுப்பு மருந்தைப் பேரளவில் தயாரிக்கும் திறனை இந்தியா கொண்டிருப்பதாகவும் ரண்தீப் குலே

# சென்னை விமான நிலையத்தில் தமிழ் பாதுகாவலர்கள் நியமனம்!

நாடாளுமன்ற குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக தி.மு.க. மகளிரணி செயலாளரும், தூத்துக்குடி தொகுதி எம்.பி.யுமான கனிமொழி சில தினங்களுக்கு முன் சென்னை விமான நிலையத்தில் இருந்து டெல்லி புறப்பட்டுச் சென்றார். இதற்காக சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்பு சோதனையை முடித்து செல்லும்போது, அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த மத்திய தொழில் பாதுகாப்பு படை (சி.ஐ.எஸ்.எப்.) பெண் அதிகாரி ஒருவர் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கனிமொழியிடம் ஹிந்தியில் கூறினார்.

ஆனால், கனிமொழி எம்.பி.யோ, 'எனக்கு புரியவில்லை. ஆங்கிலத்தில் அல்லது தமிழில் பேசுங்கள்' என்றார். இதையடுத்து அந்த பெண் அதிகாரி 'நீங்கள் இந்தியரா?' என்று கனிமொழியிடம் கேட்டார். இந்த சம்பவம் தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்ட கனிமொழி, 'ஹிந்தி தெரிந்தால்தான் இந்தியர் என்பது எப்போதில் இருந்து முடிவு செய்யப்பட்டது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஹிந்தி திணிப்பு' என்று கூறியிருந்தார்.

அதனை தொடர்ந்து மத்திய தொழில் பாதுகாப்பு படைதனது அதிகாரபூர்வடுவிட்டர்பதிவில்,'உங்களுடைய விருப்பத்தகாத அனுபவத்துக்காக வருத்தம் தெரிவிக்கிறோம். இந்தவிவகாரத்தில்சரியானநடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பிட்ட எந்தவொரு மொழியையும் வலியுறுத்துவது மத்திய தொழில் பாதுகாப்பு படையின் கொள்கை அல்ல' என்று பதிவு ஒன்றை வெளியிட்டனர்.

இந்த சம்பவத்திற்கு தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர். மேலும் கனிமொழியிடம் கேள்வி எழுப்பிய பெண் காவலரிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னை விமான நிலையத்தில் தமிழ் தெரிந்த பாதுகாவலர்களை மட்டுமே நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய தொழிற்பாதுகாப்புப் படை டி.ஐ.ஜி. அனில்பாண்டே தெரிவித்துள்ளார்.

மேலும் விமான நிலையங்களில் மொழி சிக்கலை தவிர்ப்பதற்காக இனிமேல் பயணிகளுடன் நேரடி தொடர்பில் உள்ள பதவிகளில் இருப்பவர்கள், உள்ளூர் மொழி தெரிந்தவர்கள் மட்டுமே பணி அமர்த்தப்படுவார்கள் என்று டி.ஐ.ஜி. அனில்பாண்டே தெரிவித்துள்ளார். மேலும்பயணிகளின்உணர்வுகளைமதித்துகண்ணியத்துடன் பாதுகாவலர்கள் பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இராஜாங்க அமைச்சர்கள் விவரம்

உள்நாட்டு உள்ளக விவகார அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் – **சமல் ராஜபக்ஷ**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தை பல்வகைமை இராஜாங்க அமைச்சர் – **பிரியங்கர ஜயரத்ன**

சூரிய சக்தி , காற்று, நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் – **துமிந்த திசாநாயக்க**

பத்திக், கைத்தறி உற்பத்தி, உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் – **தயாசிறி ஜயசேகர**

கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் – **லசந்த அழகியவன்ன**

சிறைச்சாலைகள் புனரமைப்பு, சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் – **சுதர்சினி பெர்னான்டோபுள்ளே**

தெங்கு, கித்துள், பனை உற்பத்தி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **அருந்திக்க பெர்னான்டோ**

கிராமிய வீதிகள், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் – **நிமல் லங்சா**

காணி முகாமைத்துவ அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் – **ரொசான் ரணசிங்க**

தேயிலை ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் – **கனக ஹேரத்**

தேசிய மரபுரிமைகள், கிராமிய கலைகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சர் – **விதுல விக்கிரமநாயக்க**

சிறு பயிர்செய்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **ஜானக வக்கும்புர**

பௌத்த பல்கலைக்கழகங்கள், பிரிவெனாக்கல் இராஜாங்க அமைச்சர் – **விஜித்த பேருகொட**

சமுர்த்தி, வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **கொன் சேமசிங்க**

உர உற்பத்தி, இரசாயன வளங்கள் இராஜாங்க அமைச்சர் – **மொஹான் டி சில்வா**

இரத்தினக்கல், கனிய வளங்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் – **ரொஹான் ரத்வத்த**

வாகன ஒழுங்குறுத்துகை, மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் – **திலும் அமுனுகம**

வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் – **விமரவீர திசாநாயக்க**

பிராந்திய உறவு அபிவிருத்தி நடவடிக்கை இராஜாங்க அமைச்சர் – **தாரக பாலசூரிய**

கிராமிய வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் – **இந்திக்க அநுருத்த**

மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் – **காஞ்சன விஜயசேகர**

கிராமிய மற்றும் பிரதேச நீர் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **சனத் நிசாந்த**

மகாவலி வலய கால்வாய் அபிவிருத்தி, பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்– **சிறிபால கம்லத்**

மகாணசபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் – **சரத் வீரசேகர**

கிராமிய வயல்நிலங்கள், குளங்கள், நீர்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **அநுராத ஜய ரத்ன**

தபால் சேவைகள், வெகுசன ஊடக தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **சதாசிவம் வியாழேந்திரன்**

கிராமிய, பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சர் – **தேனுக விதானகமகே**

ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **சிசிர ஜயக்கொடி**

மகளிர், சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **பியால் நிஷாந்த டி சில்வா**

கிராமிய கைத்தொழில் மேம்பாடு இராஜாங்க அமைச்சர் – **பிரசன்ன ரணவீர**

விமான சேவைகள், ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் – **டி.பி.ஜானக்க**

கால்நடை வளங்கள், பால் – **முட்டை சார்ந்த** தொழில் இராஜாங்க அமைச்சர் – **டி.பி.ஹேரத்**

நெல், தானிய வகைகள், விதை உற்பத்தி, உயர் தொழில்நுட்பம் இராஜாங்க அமைச்சர் – **சஷீந்திர ராஜபக்ஷ**

நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை இராஜாங்க அமைச்சர் – **நாலக்க கொடஹேவா**

தோட்ட வீடமைப்பு சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் – **ஜீவன் தொண்டமான்**

நிதி மூலதனசந்தை, அரச தொழில் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் – **அஜித் நிவாட் கப்ரால்**


திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி இராஜாங்க அமைச்சர் – **சீதா அரம்பேபொல**

ஔடத உற்பத்தி இராஜாங்க அமைச்சர் – **சன்ன ஜயசுமன**

# மாவட்ட இணைப்புகுழு தலைவர்கள் நியமனம்

கொழும்பு மாவட்டம் – பிரதீப் உதுகொட
கம்பஹா மாவட்டம் – சமன் பிரதீப் விதான
களுத்துறை மாவட்டம் – சஞ்சீவ எதிரிமான்ன
கண்டி மாவட்டம் – வசந்த யாப்பா பண்டார
மாத்தளை மாவட்டம் – எஸ். நாமக்க பண்டார
நுவரெலியா மாவட்டம் – எஸ். பி. திஸாநாயக்க
காலி மாவட்டம் – சம்பத் அத்துகோரள
மாத்தறை மாவட்டம் – நிபுண ரணவக்க
ஹம்பாந்தோட்டை மாவட்டம் – உபுல் கலப்பத்தி
யாழ்ப்பாணம் மாவட்டம் – அங்கஜன் இராமநாதன்
கிளிநொச்சி மாவட்டம் – டக்ளஸ் தேவானந்தா
வவுனியா மாவட்டம் – கே. திலீபன்
மன்னார், முல்லைத்தீவு மாவட்டம் – காதர் மஸ்தான்
அம்பாறை மாவட்டம் – டி. வீரசிங்க
திருகோணமலை மாவட்டம் – கபில அத்துகோரள
குருநாகல் மாவட்டம் – குணபால ரத்னசேகர
புத்தளம் மாவட்டம் – அசோக பிரியந்த
அநுராதபுரம் மாவட்டம் – எச். நந்தசேன
பொலன்னறுவை மாவட்டம் – அமரகீர்த்தி அத்துகோரள
பதுளை மாவட்டம் – சுதர்ன தெனிபிட்டிய
மொனராகலை மாவட்டம் – குமாரசிறி ரத்நாயக்க
இரத்தினபுரி மாவட்டம் – அகில எல்லாவல
கேகாலை மாவட்டம் – திருமதி ராஜிகா விக்ரமசிங்க

# கொரோனா தொற்றினால் குணமானோர் அதிகரிப்பு!



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 638 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 16 பேர் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் மொத்தமாக அடையாளம் காணப்பட்டுள்ள 2 ஆயிரத்து 880 பேரில் 231 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை 49 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள்

பாதுகாப்பு அமைச்சர் – **ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ**

நிதி, புத்தசாசனம்,மத விவகாரம் மற்றும் கலாசார அலுவல்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் – **பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ**

தொழில் அமைச்சர் – **நிமால் சிறிபா லடி சில்வா**

கல்வியமைச்சர் – **ஜி.எல்.பீரிஸ்**

சுகாதார அமைச்சர் – **பவித்திராதேவி வன்னியாராச்சி**

வெளிவிவகார அமைச்சர் – **தினேஷ் குணவர்தன**

கடற்றொழில் அமைச்சர் – **டக்ளஸ் தேவானந்தா**

போக்குவரத்து அமைச்சர் – **காமினி லொக்குகே**

வர்த்தக அமைச்சர் – **பந்துல குண வர்தன**

வனஜீவராசிகள் – **சி.பி.ரட்நாயக்க**

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் – **ஜனக்க பண்டார தென்னகோன்**

வெகுஜன ஊடக அமைச்சர் – **கெஹ லிய ரம்புக்வெல்ல**

நீர்பாசனத்துறை அமைச்சர் – **சமல் ராஜபக்ஷ**

மின்சக்தி அமைச்சர் – **டலஸ் அழகப் பெரும**

நெடுஞ்சாலைகள் அமைச்சர் – **ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ**

கைத்தொழில் அமைச்சர் – **விமல் வீரசன்ஸ**

சுற்றாடல் துறை அமைச்சர் – **மஹிந்த அமரவீர**

காணி அமைச்சர் – **எஸ்.எம்.சந்திர சேன**

கமத்தொழில் அமைச்சர் – **மஹிந் தானந்த அளுத்கமகே**

நீர்வழங்கல் துறை அமைச்சர் – **வாசு தேவ நாணயக்கார**

வலுசக்தி அமைச்சர் – **உதய பிரபாத் கம்பன்பில**

பெருந்தோட்டத்துறை அமைச்சர் – **ரமேஷ் பத்திரண**

சுற்றுலாத்துறை அமைச்சர் – **பிரசன்ன ரணதுங்க**

துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் – **ரோஹித அபேகுணவர்தன**

இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் – **நாமல் ராஜபக்ஷ**

நீதியமைச்சர் – **அலி சப்ரி**

# யாழ் போதனா பணிப்பாளர் சிறைச்சாலைக்கு விஜயம்!



யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி யாழ் சிறைச்சாலை அத்தியட்சகரின் அழைப்பில் வைத்தியர்கள் சிலருடன் சிறைச்சாலைக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி தற்போது யாழ்ப்பாண சிறைச்சாலையில் புனர்வாழ்வு பெற்று வரும் கைதிகளுடன் கலந்துரையாடிய பணிப்பாளர், சிறைச்சாலையில் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தியமைக்காகவும் தற்போது சிறைச் சாலையில் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

சிறைச்சாலையிலிருந்து குறித்த கைதிகள் விடுதலை செய்யப்பட்ட பின் மீண்டும் போதைப்பொருள்களைப் பயன்படுத்தாமல் அவர்களைக் கண்காணிக்கும் பொறிமுறைமையொன்றை உருவாக்கி சமூகத்தில் அவர்களை பெறுமதியானவர்களாக மாற்றி எதிர் காலத்தில் போதைப்பொருள் பாவனையற்ற நாட்டை உருவாக்குவதற்கு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்குவதாக பணிப்பாளர் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாண சிறைச்சாலையின் பிரதம சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் சிறைச்சாலை ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# விநோ, செல்வத்துக்கு அமோகமான வரவேற்பு!

கற்குழி பொது அமைப்புக்கள் மற்றும் மக்களின் ஏற்பாட்டில் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வினோநோதராதலிங்கம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இந்த இவர்கள் இருவரும் மாலை அணிவிக்கப்பட்டு கற்குழி வீதி ஊடாக பிரதேச மக்களால் அழைத்து வரப்பட்டனர். அத்துடன் பொன்னாடை போர்த்தியும் இவர்களை மக்கள் கௌரவித்தனர்.

கற்குழி கிராம அபிவிருத்தி சங்கத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கற்குழி மக்கள் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# 2020 பொதுத்தேர்தல் பற்றிய ஒருபார்வை

பாகம் - 05



இலங்கையினுடைய தேர்தல் வரலாற்றிலே அதிகளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்ட தேர்தலாக இந்தத் தேர்தல் அமைந்துள்ளது. வாக்காளர் தமது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வாக்குச்சாவடிக்குச் சென்று தங்களது வாக்குகளை அளிப்பது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், அவ்வாறு அளிக்கப்பட்ட வாக்குகளை சரியான முறையில் அளிக்கத்தவறுவது வருந்தத்தக்கது. இன்னும் சில வாக்காளர்கள் தங்களது வாக்களிக்கும் கடமை யை நிறைவேற்றத் தவறி இருக்கிறார்கள். இம்முறைத்தேர்தலில் கடந்த முறை வாக்காளர் பட்டியலே பயன்படுத்தப்பட்டது. இம்முறை தேர்தலில் 16 லட்சத்து 263 ஆயிரத்து 885 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். ஆனால் 12 லட்சத்து 343 ஆயிரத்து 302 வாக்காளர்களே வாக்களித்துள்ளனர். இது 75.89 சதவீதமாக அமைகின்றது. ஏனையோர் அதாவது 3 லட்சத்து 920 ஆயிரத்து 583 வாக்காளர்கள் (24.11வீதம்) வாக்களிக்கவில்லை. கடந்தமுறை வாக்காளர் பட்டியல் இம்முறை பயன்படுத்தியதால் வாக்காளர் இறந்திருக்கலாம் அல்லது வாக்காளர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கலாம் அல்லது கொரோனா தொற்றின் பயம் அல்லது வாக்களிப்பதையே நிராகரித்திருக்கலாம். இது ஒரு பக்கமிருக்க, அளிக்கப்பட்ட வாக்குகளில் 11 லட்சத்து 598 ஆயிரத்து 929 வாக்குகளே (71.32வீதம்) ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளாகவும், 7 லட்சத்து 44 ஆயிரத்து 373 (4.58வீதம்) வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றது. அதிகமான வாக்குகள் இத்தேர்தலிலே நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை கீழ்வரும் அட்டவனை வெளிக்காட்டி நிற்கின்றது.

**இல மாகாணங்கள் தேர்தல் மாவட்டங்கள் வாக்குகள் மொத்தம்**

| இல | மாகாணங்கள் | தேர்தல் மாவட்டங்கள் | வாக்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 35,006 | 52,025 |
| | | வன்னி | 17,019 | |
| 02 | கிழக்கு மாகாணம் | திருகோணாமலை | 14,125 | 47,310 குறைந்த வாக்குகள் |
| | | மட்டக்களப்பு | 16,838 | |
| | | அம்பாறை (திஹாமடுல்ல) | 16,347 | |
| 03 | மேல் மாகாணம் | கொழும்பு | 81,034 | 202,958 கூடிய வாக்குகள் |
| | | கம்பஹா | 75,509 | |
| | | களுத்துறை | 46,415 | |
| 04 | தென் மாகாணம் | காலி | 35,751 | 77,300 |
| | | மாத்தறை | 22,578 | |
| | | அம்பாந்தோட்டை | 18,971 | |
| 05 | மத்திய மாகாணம் | கண்டி | 57,091 | 123,642 |
| | | நுவரெலியா | 42,048 | |
| | | மாத்தளை | 24,503 | |
| 06 | வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | 35,469 | 51,489 |
| | | பொலன்னறுவை | 16,020 | |
| 07 | வடமேல் மாகாணம் | குருநாகல் | 46,414 | 75,680 |
| | | புத்தளம் | 29,266 | |
| 08 | ஊவா மாகாணம் | பதுளை | 38,621 | 58,933 |
| | | மொனராகலை | 20,312 | |
| 09 | சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 30,489 | 55,036 |
| | | கேகாலை | 24,547 | |
| | | மொத்தம் | 744,373 | |

இந்த ஆண்டு பொதுத்தேர்தலில் மேல் மாகாணத்திலே அதிகளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டன . குறைந்தளவான வாக்குகள் கிழக்கு மாகாணத்திலே நிராகரிக்கப்பட்ட ன மாவட்ட அடிப்படையில் பார்க்கும் போது கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன . குறைந்தளவான வாக்குகள் திருகோணமலை மாவட்டத்திலேயே நிராகரிக்கப்பட்டன .

கடந்த 2015 பொதுத்தேர்தலில் 5 லட்சத்து 17 ஆயிரத்து 123 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன . இம்முறை அதிலும் அதிகமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு வாக்குகள் நிராகரிக்கப்பட்டமைக்கு பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன . ஏன் வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு பல காரணங்களைக் கூறலாம்.

இவைதவிர தேர்தல் கண்காணிக்கும் நிலையமும் காரணங்களை முன்வைத்துள்ளது. வாக்குகள் நிராகரிக்கப்பட்டதற்கு கொரோனா தொற்று எவ்விதத்திலும் காரணமாய் அமையாது. வாக்காளர்கள் வாக்களிக்கத் தவறியதற்கு இது காரணம் எனலாம்.

ஆனால் ஒருவிதத்தில் பார்க்கும் போது வாக்கு நிராகரிக்கப்படுவதற்கு கொரோனா பதட்டம்

## 7,44,373 வாக்குகளுக்கு

## என்ன நடந்தது என்ன காரணம்?

காரணமாக அமைந்திருக்கலாம். எங்கு வாக்குச் சாவடிக்குள் தொற்று வந்துவிடுமோ என்ற பதட்டத்தின் மூலம் தெரிவுகளை தவறான முறையில் மேற்கொண்டிருக்கலாம்.

அதேபோன்று தேர்தல் பற்றிய அறிவு வாக்காளர்களுக்குப் போதுமானதாக இல்லாமையே பெருவாரியான காரணம் எனலாம். எவ்வாறு வாக்களிப்பது, என்பது பற்றிய செயலமர்வுகள் மற்றும் விழிப்புணர்வுகளை வாக்காளர் மத்தியில் மேற்கொள்ளப்படாமையே ஆகும்.

படித்தவர்கள் பாமர மக்கள் மத்தியில் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது தொடர்பான விடயங்களினை எடுத்துக்கூறி அது தொடர்பான அறிவினை ஊட்டியிருந்தால் பெருவாரியான வாக்குகள் நிராகரிக்கப்படுவதைத் தடுத்திருக்கலாம். பாமர மக்களுக்குத்தான் வாக்களித்தல் தொடர்பான அறிவு இன்மையால் சரியாக வாக்களிக்கத் தவறியிருக்கலாம். ஆனால் இம்முறை தபால் மூலமான வாக்குகளும் அதிகப்படியாக நிராகரிக்கப்பட்டிருக் கின்றன என்பது கவலைதருகின்ற விடயமாகும்.

முறையாகவாக்களிக்கத் தவறியமையும் மிக முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது. கடந்த காலங்களில் வேட்பாளர்கள் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமையினால் சலிப்படைந்து வேண்டாவெறுப்பின் மத்தியில் வாக்களித்திருந்திருப்பார்கள். அதுமட்டுமல்லாது கட்சியின் சின்னத்திற்கு தங்களது வாக்கினை அளித்தவர்கள் வேட்பாளர்களின் விருப்பத்தெரிவினை சுயேட்சைக்குழு 1, சுயேட்சைக்குழு 2 என்று குறிப்பிட்டிருந்த கட்டத்திற்குள் தங்களது புள்ளடிகளை இட்டுள்ளனர். இவ்வாறுதான் பல வாக்குகள் செல்லுபடியற்றவையாகி இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சிகளுக்குள் ஏற்பட்ட பிளவும் ஒருவிதத்தில் காரணமாய் அமைகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்ட பிளவின் காரணமாக ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதா? இல்லை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதா? என்பதில் வாக்காளர்கள் குழப்பத்தின் மத்தியில் தங்கள் வாக்களிப்பைத் தவிர்த்திருக்கலாம். அதேபோன்று வாக்காளர்களின் மத்தியில் காணப்பட்ட குழப்பநிலையும் காரணமாய் அமைந்திருக்கின்றது எனலாம்.

இம்முறை அதிகளவான வேட்பாளர்கள் களமிறங்கியமையால் தாங்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதில் எற்பட்ட குழப்பநிலையினால் வாக்குகளை நிராகரித்திருக்கலாம். அத்தோடு வாக்காளர்களின் மனநிலையும் காரணமாய் அமைகின்றது. எத்தனை வருடகாலமாய் வாக்களித்து என்ன பலனைப் பெற்றிருக்கின்றோம், என்ன அபிலிருத்திப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன, வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத்தவறியமை போன்ற பலவற்றை சிந்தித்து ஏன் வாக்களிப்பது என்று வேண்டும் என்றே தங்களவு வாக்குகளை நிராகரித்திருக்கலாம். மேலும் வாக்காளர்களின் பார்வைக்குறைபாடுகள் போன்ற பல காரணங்களினால் இந்த தேர்தலில் அதிகளவான வாக்குள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்று கூற முடியும்.

கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்கள் வாழ்கின்ற மாவட்டங்களிலேயே அதிகமான வாக்குகள் நிராகரிக்கபட்டிருந்தன. ஆனால் இம்முறை தமிழர் பிரதேசங்களைவிட சிங்கள மக்கள் வாழுகின்ற மாவட்டத்திலேயே அதிகப்படியான வாக்கு நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே வாக்குகள் ஏன் நிராகரிக்கப்படுகின்றன என்பதற்கான காரணத்தினை உரிய அதிகாரிகள் ஆழமாக சிந்தித்து, எதிர்காலத்தில் வாக்குகள் நிராகரிப்பதைத் தடுப்பதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயமாகும்.




*2020 பொதுத்தேர்தல் பற்றிய ஒருபார்வை தொடரும்...*

**பஞ்சாட்சரம் ஜோன் டிலக்சன்**
**சமூகவியல் துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



பஞ்சாட்சரம் ஜோன் டிலக்சன்
சமூகவியல் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.



உலக இளைஞர் தினம் இன்றாகும். ஆதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

# நாட்டின் எதிர்காலத் தூண்கள் இளைஞர்களே!

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சர்வதேச இளைஞர் தினம் ஆண்டுதோறும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி கொண்டாப்படுகின்றது. இளைஞர்கள் ஒரு நாட்டின் எதிர்காலத் தூண்களாக விளங்குகின்றனர். இளைஞர்களை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் மற்றும் அழிவுபூர்வமாகவுமான செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றனர். பொதுவாக ஒரு நாட்டின் சொத்துக்களாகக் கருதப்படும் இளைஞர்களை வழிப்படுத்தி அவர்களை ஆக்கபூர்வமான, அறிவுபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி ஆரோக்கியமான எதிர்காலமொன்றுக்கு வழிகாட்டுவது மிக அவசியம். அதுமட்டுமன்றி அவர்களது நம்பிக்கை உணர்வினையும், வெற்றி மனப்பாங்கினையும் ஏற்படுத்துவதுடன், இளைஞர்களின் செயற்பாடுகளை கௌரவித்து மதிப்பளிப்பதும் இத்தினத்தின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

இத்தினமானது எவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டது என்று பார்த்தால், 1998 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 08 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை லிஸ்பன் நகரில் நடைபெற்ற உலக நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் குழு சர்வதேச ரீதியில் இளைஞர்களின் பிரச்சினைகளையும், இளைஞர்களின் செயல்பாடுகளையும் கவனத்திற்கொள்ளும் வகையில் இளைஞர்களுக்கான சர்வதேச தினம் ஒன்றைப் பிரகடனப்படுத்த வேண்டும் என சிபாரிசு செய்தது. இனைஞர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவது, மற்றும் அவர்களை சக்தி படைத்தவர்களாக மாற்ற வேண்டும் என்கின்ற பார்வை 1995 ஆம் ஆண்டு ஐ.நா கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதன்படி 1999 டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் 54/120 இலக்க பிரேரனைப்படி சர்வதேச இளைஞர் தினம் ஓகஸ்ட் 12 ஆம் திகதி கொண்டாடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய 2000 ஆம் ஆண்டு முதல் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் குழந்தைப்பருவம், பிள்ளைப் பருவம், இளமை பருவம், முதுமைப் பருவம் ஆகிய நான்கும் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. ஏனைய பருவங்களை விட இளைமைப்பருவம் மிக முக்கியமாகும். பொதுவாக 18 - 29 வயதுவரை இளமைப் பருவம். இவர்கள் இளைஞர் அல்லது வாலிபர் என்று அழைக்கப்படுகின்றனர். பிற பருவத்தினருடன் ஒப்பிடுகையில் இளைஞர்களிடம் குறிப்பிடத்தக்க சில பண்பியல்புகள் உள்ளன. இளைய பருவம் மாற்றத்தை இலகுவில் ஏற்று தன்னை மாற்றியமைத்துக்கொள்ளக் கூடியது, துணிவுமிக்கது, செயற்பாட்டை முதன்மைப் படுத்துவது. இப்பருவத்தில் பாலியல் கவர்ச்சியும் ஈடுபாடும் அதிகம் இருக்கும். இளைஞர்கள் தம் சிறப்பு. உத்வேகம், அர்ப்பணிப்பு, நாட்டுப்பற்று, இளமை, துடிப்பு, சுயநலமில்லாது பாடுபடும் அர்ப்பணிப்பு, ஞானம் மிகுந்த நற்பண்புகள் இளைஞர்களிடம் உள்ளது. உலகின் எல்லா நாடுகளிலும் இளைஞர்கள் தம் திறமையை வெளிப்படுத்தி அந்த நாடுகளின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக உள்ளனர். கடும் குளிர், மிகுந்த வெப்பம் என எந்தவிதமான நிலையிலும் பணிபுரியும் தகுதியுள்ளவர்கள். உடல் ஆற்றலுடன் அறிவாற்றலில் சிறந்து விளங்குபவர்கள் இளைஞர்கள்தான். உலகின் பல முன்னோடி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளைத் தம் தகுதியால் பெற்றுக் கெள்வார்கள். பணிபுரிய சுய கௌரவம் பார்க்காமல் குடும்பப் பொறுப்புடன் செயற்படும் இளைஞர் பட்டாளம் நம்மிடையே உள்ளது. சிக்கலான கல்வி கற்பதிலே முன்னணியில் நிற்பவர்கள் நம் இளைஞர்கள். தமக்கென தனிப் பாதையை வகுத்துக் கொண்டு, அதில் திறமையுடனும், துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் பயணிப்பவர்கள்தான் இளைஞர்கள் எனலாம்.

இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பிரதானமாக கவனத்தில் ஈர்க்கும் முகமாக உலகளாவிய ரீதியில் அரசுகள், அரச நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் செயற்பட வேண்டும். தற்காலத்தில் ஒவ்வோர் இளைஞனும் பல சவால்களை எதிர் கொள்கின்றான். கல்வி, தொழில்வாய்ப்பு, அபிவிருத்தி இன்மை, எதிர்காலம் பற்றிய சிந்தனை, குடும்பப் பொறுப்பு, போட்டி நிறைந்த உலகில் எவ்வாறு சாதிப்பது, இவ்வாறு மாற்று சிந்தனை கொண்ட இளந்துடிப்புள்ளவர்களாக இளைஞர்கள் உள்ளனர். அன்றாடம் பல இன்னல்களை எதிர்கொண்டு வாழ்கின்றனர். ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சினை என்பது வாழ்க்கையில் வரும். ஆனால் அந்த பிரச்சினையை சரியாக முகங்கொடுத்து வெற்றி கொண்டு சாதித்துக் காட்டுபவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள்தான்.

தற்காலத்தில் இளைஞர்கள் பலரகத்தில் காணப்படுகின்றனர். சுயமாக சாதிக்க வேண்டும் என்பவர்கள், பிறரில் தங்கி வாழ்பவர்கள், எதிர்காலத்தைப் பற்றிய எவ்வித சிந்தனையும் இல்லாதவர்கள், குடும்பத்தைப் பற்றிய அக்கறையற்றவர்கள், சுயநலனை மட்டும் அடிப்படையாகக் கொண்டவர்கள் இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம். எல்லா இளைஞர்களும் ஒரே சிந்தனை, ஒரே நோக்கு, ஒரே இலட்சியம் கொண்டவர்களாக இருக்க முடியாது. ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட தன்மையுடையவர்கள்.

குறிப்பாகச் சொல்லப்போனால் ஒவ்வொரு நாட்டினுடைய அபிவிருத்திப் பாதையிலும் இளைஞர்களின் பங்களிப்பு காத்திரமானது. இளைஞர்களின் பங்களிப்பும், மாறுபட்ட அணுகுமுறையும் நாட்டின் வளர்ச்சிப் போக்கினைத் தீர்மானிப்பதற்குப் பேருதவியாக இருந்ததால் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கேற்ப நாட்டின் வளர்ச்சி விரைவுபடுத்தப்படும். அந்தவகையில் இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் வளர்ச்சித் தூண்களாகக் கருதப்பட்டனர். எதிர்காலம் மட்டுமன்றி நிகழ்காலத் தேவைகளையும் கருத்தில் கொண்டு வளர்ச்சிச் சமத்துவத்தைப் பரவலாக்குவதற்கான செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் வளர்ச்சிப் பங்காளிகளாகவும் செயற்பட்டு வருகின்றனர். அறிவு, ஆற்றல், அனுபவம், துணிவு போன்றவற்றின் அடிப்படையில் வளரும் நாடுகளில் மட்டுமல்ல, வளர்ந்த நாடுகளிலும் கூட இளைஞர்களின் செயல்பாடுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதால் மாற்றங்களுக்கு வித்திடும் இன்றைய உலகில் இளைஞர்கள் மாற்று சக்திகளாகவும் உருவாகி நிற்கின்றனர்.

உலகில் சில நாடுகள் தான் மக்கள்தொகையில் கணிசமான அளவு இளைஞர்களை வரப்பிரசாதமாகப் பெற்றுள்ளது. உலக அரங்கில் அபிவிருத்தி அடைந்து கொண்டுவரும் நாட்டுகளின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் அடித்தளமாக இருப்பது வளர்ச்சி சார்ந்த நிகழ்வுகளில் இளைஞர்கள் ஈடுபடுவதும், அவர்களின் உறுதிமிக்க பங்களிப்பும் தான். இவர்களின் ஈடு இணையற்ற, நேரடியான மற்றும் மறைமுகமான பங்களிப்பால் சவால்களை எதிர்கொண்டு அதற்காகு சரியான தீர்வுகளைக் கண்டறிந்து சமூக, பொருளாதாரத் தளத்தில் வளமான பாதையில் பயணித்து வருகின்றது.

எனவே ஒவ்வொரு நாட்டிலும் அங்கு நிலவும் சூழ்நிலைக்கேற்ப அந்நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. பன்முகத் திறன் கொண்ட இவர்கள் அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றனர். தகவல் தொழில்நுட்பப் புரட்சியைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிடும் நாடுகள் பின்தங்கிய நாடுகளாகவே இருக்கும் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால், இன்று அந்நிலை மாறி எந்தவொரு நாடு இளைஞர்களின் ஆற்றலைப் பயன்படுத்தத் தவறுகின்றதோ அல்லது திட்டமிடாமல் தவறான வழிகளில் பயன்படுத்த முயலுகின்றதோ அது வளர்ந்த நாடுகளின் பட்டியலை எட்டிப் பிடிக்க இயலாது என்பதும், தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முடியாது என்பதும் வெட்ட வெளிச்சமாகிறது.

நாளைய சமுதாயத்தின் தூண்களாக, வருங்காலத் தலைவர்களாக அறியப்படும் இன்றைய இளைஞர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மேம்பட்ட சமுதாயத்தை உலகத் தரத்தில் ஏற்படுத்த முடியும். இளைஞர்கள் முன்னேற்றம் தொடர்பில் ஒவ்வொருதரப்பினரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இளைஞர்கள் முன்னேற்றம் என்பது அடிப்படையில் இரண்டு முக்கிய இலக்குகளைக் கொண்டது. அவை, அக முன்னேற்றம், புற முன்னேற்றம் என்பதாகும். அக முன்னேற்றம் என்பது இளைஞர்களின் தனித் திறமை சார்ந்தது. ஒரு செயலை மேற்கொள்வதற்கான தனி நபர் திறன்களை வளர்த்தல் மற்றும் முறையாகச் செயல்படுத்துதலாகும். புற முன்னேற்றம் என்பது பொது நிலையில் சமூக மேம்பாடு கருதி ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடுதல் சார்ந்தது. குடும்பம், சமூகம், நாடு, மக்கள், வளர்ச்சி, மாற்றம் போன்றவற்றில் முழு ஈடுபாட்டுடன் பங்கேற்றல், பிறரைப் புரிந்து கொள்ளுதல், சிக்கல்களுக்கு உரிய தீர்வு காணுதல், உறுதியான முடிவெடுத்தல், பாதிப்புகளை உள்வாங்குதல் போன்ற திறன்களையும் கருத்தில் கொள்ள வேண்டிள்ளது அவசியம். ஆகவே நாட்டினுடைய எதிர்காலத் தூண்களாக விளங்கும் இளைஞர்கள் மீது ஒவ்வொரு தரப்பினரும் கரிசனை கொண்டு செயற்படுவது அவசியம். அதேபோல இளைஞர்களாகிய ஒவ்வொருவரும் நாட்டினுடைய செயற்பாடுகளில் ஈடுபாட்டுடனும், அக்கறையுடனும் பங்கேற்பது அவசியம். இல்லையேல் நாட்டினுடைய எதிர்காலம் கேள்விக்குறியே.

# சொத்துவிவரங்கள் சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு நடவடிக்கை!

பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்களில், இதுவரை தமது சொத்து விவரங்களை அறிவிக்காத வேட்பாளர்களின் பெயர்களை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் களமிறங்கிய வேட்பாளர்கள், வேட்பு மனுத் தாக்கல் செய்து முதல் மூன்று மாதங்களுக்கு தமது சொத்து விவரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பதவியேற்பதற்கு முன் தமது சொத்து விவரங்கள் அடங்கிய அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வேட்பு மனுத் தாக்கல் செய்து தற்போது சுமார் ஐந்து மாதங்கள் நிறைவடைந்துள்ளன எனவும் பெப்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஏழாயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்த நிலையில், அவர்களில் பெரும்பாலனவர்கள் இதுவரை தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்தவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சொத்து விபரங்களை அறிவிக்காதவர்களின் பெயர்ப் பட்டியலைக் கோரி, தகவல் அறியும் சட்டத்தின் கீழ், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றை அனுப்பியுள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு பதில் கிடைத்தவுடன் அது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தமிழரசு தேசிய பட்டியல் நியமனத்துக்கு சம்பந்தனை நாடுவதில் அர்த்தமேயில்லை

## கட்சியின் மத்திய குழுவில் சம்பந்தன் இல்லை என்கின்றார் வீ.எஸ்.சிவகரன்

(தலைமன்னார் நிருபர்: வாஸ் கூஞ்ஞ)

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் சம்பந்தன் இல்லாத பொழுது ஏன் தமிழரசுக் கட்சியின் தேசிய பட்டியல் தெரிவுக்கு சம்பந்தனைத் தமிழரசுக் கட்சியினர் நாட வேண்டும் என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் தமிழரசு கட்சியின் இளைஞர் அணியின் தலைவருமான வீ.எஸ்.சிவகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கையில் –

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் தரப்புக்கு பல்வேறு படிப்பினையை கற்பித்திருக்கின்றது. ஒற்றுமையின்மை எவ்வாறன விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை எல்லோரும் புரிந்திருப்பார்கள்.

இந்த அரசு பெரும்பான்மையோடு ஆட்சி பீடம் ஏறியிருக்கின்றது. இந்த நிலையில் தமிழ் தரப்புகள் தொடர்ந்து பிரிந்து நின்றால் எவ்வாறான விளைவுகளை அவர்கள் எதிர்நோக்கப் போகின்றார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்களுடைய முரண்பாடுகள் தமிழ் மக்களின் இருப்புகளுக்கு எவ்வாறு ஆபத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

2015 ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பின் இணக்க அரசியலே இவ்வாறான நிலையை உருவாக்கி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் சுதந்திரக் கட்சியும் வன்னியில் ஐக்கிய மக்கள் சக்தியும் மட்டக்களப்பில் பிள்ளையானும் தெரிவு செய்யப்பட்டமை வருந்தக்கூடியதாகும்.

இவ்வாறான நிலைமைகள் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரை இடம்பெற்ற ஏழு தேர்தல்களில் இவ்வாறு இருக்கவில்லை

தமிழ் மக்கள் பல சலுகைகளை பெற்றுக் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் தமிழ் தேசியத்துக்கும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்

2015 ஆட்சி மாற்றத்திற்கு பின்பு இணக்க அரசியலே இவ்வாறான செயல்பாட்டை நெறிப்படுத்தியிருந்தது. இந்த நிலையில் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்னும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை.

இவர்கள் இன்னும் தங்களுக்குள்ளே போட்டா போட்டியிலேயே இருந்து வருகின்றனர். அத்துடன் மாற்று அணியும் வலுவாக அமையவில்லை. மக்கள் மாற்றத்துக்காக வாக்களித்திருந்தால் ஒன்று விக்னேஸ்வரன் கூட்டுக்கோ அல்லது கஜேந்திரன் கூட்டுக்கோ வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை.

அபிவிருத்திக்கும் இணக்க அரசியலுக்குமே தமிழ் மக்கள் சென்றுள்ளமை வேதனையே. இந்த நிலையில் மாற்றம் ஏற்படுத்தாவிடில் அரசு தமிழ் மக்களை இலகுவாக தன் பக்கம் ஈர்க்கக்கூடியதாக இருக்கும்.

ஆகவே அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுவிட்டது

இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களில் வடக்கு, கிழக்கில் வல்லமை பொருந்திவர்களோ அல்லது சக்தி கொண்டவர்களோ அல்லது அறிவு பூர்வமாக உரையாடக்கூடியவர்களோ, இராஜீக ரீதியாக உரையாடக்கூடியவர்களோ பெருவாரியாக இல்லை.

ஜனநாயகம் என்பது ஒரு கேலி கூத்தாக, ஜனநாயகம் என்பது ஒரு கும்பலின் ஆட்சி என்ற லெனின் கூற்றையும் அரசியல் என்பது அயோக்கியனின் கடைசி புகலிடம் என்பதையும் நிரூபிப்பதான நிலமை. மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களையும், சிறையில் இருப்பவர்களையும், போதைப் பொருள் வியாபாரிகளையும் இந்த நாடாளுமன்றுக்கு மக்கள் தெரிவு செய்துள்ள துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாற்று அணி என்பது அவர்கள் ஒரு வாக்கு திரட்சியை ஏற்படுத்தவில்லை. இவர்கள் வெறுமனே கூட்டமைப்புக்கு எதிரான ஒரு கோஷம் எழுப்பியவர்களாகவே இருந்தார்கள். இவர்களின் பேச்சுக்களை மக்கள் கேட்டார்கள் தவிர, மக்கள் ரசிக்கவில்லை. ஆகவே இனிமேல் அனைவரும் ஒன்றிணைவது கட்டாயத்தின் தேவையாகும்.



இதேசமயம், தமிழரசுக் கட்சிக்குள் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. சுமந்திரனும் சிறிதரனும் கட்சியைப் பகிரங்கமாக விமர்சனம் செய்யும் நிலை உருவாகியுள்ளது

இதற்கு எதிராக கட்சி நடவடிக்கை எடுக்குமா என்பதும் கேள்விக்குறியே. நாங்கள் கட்சிக்கு எதிராக பேசினோம் எனத் தான்தோன்றித்தனமாகக் கட்சியிலிருந்து நீக்க முற்பட்டவர்கள் இக் கட்சி ஒழுக்காற்று விதி 19 இன் பிரகாரம் இவர்கள் இருவருக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பார்களா?

மாவையின் செயல்பாட்டாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. இவர் 2014 இல் கட்சியை பொறுப்பேற்ற போது ஓர்ஆளுமை கொண்டவராக இருக்கவில்லை. மாறாக சுமந்திரனில் தங்கி வாழ்ந்ததன் விளைவே இதுவாகும். ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களை எவ்வாறு அடக்கி ஒடுக்கி அழித்ததன் விளைவை இப்பொழுது அனுபவிப்பது போன்று தமிரசு கட்சியும் அனுபவிக்கின்றது

சுமந்திரன் மற்றும் சிறிதரனும் கட்சியை பின் கதவால் கைப்பற்ற நினைப்பது ஏற்புடையதல்ல. கட்சியின் பொது குழுவில் 150 அங்கத்துவர்களும் உள்ளனர். மத்திய குழு வில் 50 அங்கத்தவர்கள் கொண்டது.

பொதுக் குழுவின் அங்கீகாரம் இன்றி இவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. மத்திய குழு இருக்கத் தேசி பட்டியலை சம்பந்தனிடம் கேட்பதின் மர்மம் என்ன?

மத்திய குழுவில் தெரிவு பதவி வழியில் 22 மாவட்டத்துக்கான செயற்குழு உறுப்பினர்கள் 18 மிகுதி 10 தலைவரின் ஆலோசனையில் தெரிவு செய்யப்படுவர்.

இந்தக் குழுவில் சம்பந்தன் இல்லை. இவ்வாறு இருக்க இவர் எப்படி தமிழரசு கட்சியில் அதிகாரம் செலுத்த முடியும்?

2014 தொடக்கம் சம்பந்தன் மத்திய குழு அங்கத்துவர் அல்லர். ஆனால் அரசியல் குழுவுக்கு அவர் தலைவராக இருக்கிறார்.

தமிரசு கட்சி யாப்பின்படி 6 துணை செயலாளர்கள் மட்டுமே இருக்க முடியும். இன்றைக்கு 15 க்கு மேற்பட்ட துணை செயலாளர்கள் இருக்கின்றார்கள்.

தற்பொழுது சுமந்திரன் வகிக்கும் துணைச் செயலாளர் பதவி யாப்புக்கு முரணானது. சிவஞானம் வகிக்கும் சிரேஷ்ட துணைத் தலைவர் பதவி கூட சட்டவிரோதமானது.

ஒரு சிரேஷ்ட துணை தலைவரும் ஒரு சிரேஷ்ட பொது செயலாளரும் மட்டுமே யாப்பில் உள்ளன.

இது விடயமாக நான் மாவை சேனாதிராஜாவுக்கு கடிதம் மூலம் தெரிவித்தேன். இப்பொழுது அவர் அனுபவிக்கின்றார். – என்றார்.

# தூய்மையான வவுனியா நகரம் சூழலை காக்கும் செயற்றிட்டம்!



வவுனியா வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில் வவுனியா நகரசபையினருடன் இணைந்து சூழலைப்பாதுகாக்கும் சமூக நலன் செயற்றிட்டமான 'தூய்மையான வவுனியாநகரம்' எனும் செயற்றிட்டம் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது .

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் சமூக நலன் சார்ந்த செயற்றிட்டத்தின் கீழ் வவுனியா நகர்ப்பகுதிகளில் முக்கிய இடங்களில் வைப்பதற்காக முதற்கட்டமாக 36 குப்பை தொட்டிவைத்தல் மற்றும் அதனுடன் இணைந்தவாறான மரநடுகை செயற்றிட்டமும் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் தலைவர் எஸ். சுஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு வவுனியா நகர சபை தலைவர் இ.கௌதமன், உப நகரபிதா கு.குமாரசாமி, செயலாளர் இ.தயாபரன், நகரசபை உறுப்பினர் ரி.கே.இராஜலிங்கம், வவுனியா பிராந்திய பிரதி சுகாதாரசேவைப்பணிப்பாளர் மகேந்திரன் , சுகாதாரவைத்திய அதிகாரி வைத்தியர் பிரிஸ்குறாஸ், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்சலால் டி சில்வா வவுனியா பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி மானவடு. வர்த்தகர் சங்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நியமனம் ஹரிணி அமரசூரியவுக்கு!



தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு பேராசிரியர் ஹரிணி அமரசூரியபெயரிடப்பட்டுள்ளார்.

இதன்காரணமாக பல்கலைக்கழக பேராசிரியர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ளார் என ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இன்று(புதன்கிழமை) இது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


**Car For Sale**



NISSAN SUNNY, 2000, reg 2003, B15, 1290CC, Japan, White, AC, auto shutters, central lock, security alarm, AMW Maintenance, no accident history, 168000km. for sale Point Pedro 0774694262

# கூட்டமைப்பின் கோட்டை எம் வசம்; தமிழரின் மனதை வென்றுவிட்டோம்

## பெருமிதமடைகின்றார் மஹிந்தர்

**கொழும்பு, ஓக.12**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையாக விளங்கிய வடக்கு, கிழக்கை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் கைப்பற்றிவிட்டோம். கூட்டமைப்மைவிட அதிக ஆசனங்களைப் பெற்றுத் தமிழ் மக்களின் மனதை வென்றுவிட்டோம்.**

**- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

பிரதமராக நான்காவது தடவையாகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் முற்பகல் சுபநேரத்தில் அலரி மாளிகையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். அதன்பின்னர் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கிலுள்ள தேர்தல் மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை 9 ஆசனங்களை மட்டும் பெற்றுள்ளது. ஆனால், அங்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் அதன் பங்காளிக் கட்சிகளும் இணைந்து 11 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன. அதாவது யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தலா 2 ஆசனங்கள் வீதம் 6 ஆசனங்களையும், அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் 4 ஆசனங்களையும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையும் நாம் இலகுவாகக் கைப்பற்றியுள்ளோம். மட்டக்களப்பில் பிள்ளையான் சிறைக்குள் இருந்துகொண்டே அம்மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார் என்பது விசேட அம்சமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையை நாம் கைப்பற்றியதன் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் மனதை வென்றுவிட்டோம் என்பது நிரூபணமாகியுள்ளது.

கூட்டமைப்பினர் மீது தமிழ் மக்கள் கடும் அதிருப்தி கொண்டுள்ளனர். அவர்கள் எம்மை நம்புகின்றனர். எனவே, அவர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சியில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்போம்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனியாவது திருந்த வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்நீரோட்டத்தில் இருக்காமல் நாட்டினதும் மக்களினதும் நலன்களைக் கருத்தில்கொண்டு அவர்கள் செயற்பட வேண்டும்.

# நிரந்தர தீர்வு வேண்டும்: தப்பிப்பிழைக்க முடியாது

## மஹிந்தவுக்கு சம்பந்தன் எச்சரிக்கை



மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றியுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கியே ஆக வேண்டும். இனியும் சாக்குப்போக்குச்சொல்லாமல் நிரந்தர அரசியல் தீர்வை அரசு வழங்க வேண்டும். இந்தப் பொறுப்பிலிருந்து அரசு தப்பவே முடியாது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில்தமிழ்மக்களின் வாக்குகளைத் திட்டமிட்டு சிதறடித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனங்களை ஆளும் கட்சியினர் குறைத்துள்ளனர். எனினும், நாம் பலம் குறையவில்லை. இனிவரும் காலங்களில் இழந்த ஆசனங்களை நாம் கைப்பற்றியே தீருவோம்.

மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள மஹிந்த அரசை சர்வதேச சமூகம் நன்கு உன்னிப்பாக அவதானித்துக்கொண்டு இருக்கின்றது. கடந்த காலங்களில் செயற்பட்டதைப் போன்று இனியும் அரசு செயற்பட முடியாது.

நல்லாட்சி அரசு மேற்கொண்ட புதிய அரசமைப்புக்கான பணிகள்



இடைநடுவில் நிற்கின்றன. அந்தப் பணிகளை இந்த அரசு ஆரம்பிக்க வேண்டும்.

இந்த அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் உள்ளது. எனவே, புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது சுலபமானது.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல்தீர்வைப் பெற்றுத்தரும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும் – என்றார்

# தேசியப் பட்டியல் விவகாரம்: துரைராஜசிங்கமே பொறுப்பு

## சம்பந்தன் கைவிரிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பில் நான் பதிலளிக்கமாட்டேன். இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் துரைராஜசிங்கத்திடம் கேட்கவும். அவர்தான் இந்த விடயதானத்துக்குப் பொறுப்பு.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் அதன் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கே வழங்க வேண்டும் என்று கட்சியின் யாழ். மாவட்டக் கிளை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. எனினும், அந்தத் தீர்மானத்தை மீறி அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் தவராசா கலையரசனுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டுள்ளது. அதை உறுதிப்படுத்தும் வகையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது. இதையடுத்து தமிழரசுக் கட்சி மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சி



களும் கடும் அதிருப்தியடைந்துள்ளன.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் வினவியபோது,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் யாருக்கு உரியது என்பதை கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கமே தேர்தல்கள் செயலகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார். எனவே, இந்த விவகாரம் தொடர்பில் நான் பதிலளிக்கமாட்டேன். இது தொடர்பில் துரைராஜசிங்கத்திடம் கேட்கவும். அவர்தான் இந்த விடயதானத்துக்குப் பொறுப்பு – என்று தெரிவித்தார்.

# அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வை ஒட்டி கிளிநொச்சியில் பால்சோறு பரிமாற்றம்

அமைச்சுப் பதவிகள் பொறுப்பேற்பு நிகழ்வை அடுத்து கிளிநொச்சியில் பொதுஜன பெரமுன கட்சியினர் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனை முன்னிட்டு கிளிநொச்சி ஏ9 வீதியால் சென்றவர்களுக்கு பால்சோறு பரிமாறப்பட்டுள்ளதுடன், பட்டாசுகளும் கொளுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் உள்ள பொதுஜன பெரமுன ஆதரவாளர்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் இன்று காலை கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்திலுள்ள மகுல்மடுவ மண்டபத்தில் வைத்து பதவியேற்றிருந்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2020 இல் வெளியிடப்பெற்றது.